07.08.2025.

Spl.C.C.No.39 of 2025 (Spl.C.C.No.11 Of 2014 - CJM, Vellore)

P.W. 15 - திரு.ரஜினிகாந்த்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் மேகநாதன் எங்களுடைய அலுவலகத்திற்கு 13.08.2013 அன்று காலை 09.00 மணிக்குத்தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் குடியாத்தம், மேல் ஆலத்தூர் கிராமத்தில்தான் வசிக்கிறார். குடியாத்ததிற்கும் என்னுடைய அலுவலகத்திற்கும் 25 கி.மீ தூரம் என்றால் சுமார் 25 கி.மீ. தூரம். காலை 09.00 மணிக்கு எங்களுடைய அலுவலகத்திற்கு வந்து புகார் கொடுக்க சாத்தியக்கூறு இல்லை என்றால் சரியல்ல. புகார் எங்களிடம் நேரடியாக கொடுத்தாரா அல்லது மேல் அதிகாரியிடம் கொடுத்தாரா என்றால் மேல் அதிகாரியிடம் கொடுத்தார்.

புகார் கொடுத்த அன்று என்னுடைய மேல் அதிகாரி அலுவலகத்தில் இல்லை என்றும் அவரிடம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த புகாரை அவர் எழுதவில்லை என்றும் என்னுடைய நிலையத்தில் உள்ள யாரோ ஒருவர்தான் எழுதினார் என்றால் சரியல்ல. புகாரை பெற்ற உடனே நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேனா என்றால் உடனே அல்ல சுமார் முக்கால் மணி நேரம் விசாரணை செய்து பின்புதான் பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு புகார்தாரரை மட்டும் விசாரணை செய்தேனா அல்லது புகார் தொடர்புடைய விவரங்களை விசாரணை செய்தேனா என்றால் புகார்தாரரையும் விசாரணை செய்தேன், எதிரியை பற்றியும் தகவலாளி மூலம் விசாரணை செய்தேன். எந்த எந்த தகவலாளியை விசாரணை செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. புகார்தாரர் இந்து அவருடைய மனைவி முஸ்லீம் கலப்பு திருமண பலனை பெறுவதற்காகத்தான் விண்ணப்பம் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

அவர்களுக்கு சுமார் 3 வருடங்களுக்க முன்புதான் திருமணம் ஆனது என்று என் விசாரணையில் தெரிய வந்தது என்றால் ஆமாம். அந்த கலப்பு திருமண உதவி தொகைக்காக அவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பம் கொடுத்தார்களா அல்லது வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்தார்களா என்று என்னுடைய முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லவில்லை, அதே போன்று என்னுடைய விசாரணை அறிக்கையிலும் என்றால் சரியல்ல, முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

10.08.2013 அன்று வழக்கின் முதல் எதிரி புகார்தாரரை தொடர்பு கொண்டு பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி பணம் கேட்டது லேண்ட் லைன் மூலமாகவா அல்லது செல்போன் மூலமாகவா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தொலைப்பேசி மூலமாக என்றுதான் சொல்லியுள்ளார், லேண்ட் லைன் மூலமாகவா அல்லது செல்போன் மூலமாகவா என்று சொல்லவில்லை.

அந்த தொலைப்பேசி எண்ணையோ அல்லது அலைப்பேசி எண்ணையோ என்னுடைய விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியிருந்தால் அந்த தொலைபேசி எண்ணை சொல்லியிருப்பேன் என்றும் அவர் கேட்காததால்தான் அந்த தொலைப்பேசி எண்ணை குறித்து நான் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு பேசியிருந்தால் வீடியோ ரெகார்டு அல்லது ஆடியோ ரெகார்டு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

நான் 10.00 மணிக்கு வழக்கை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் அரை மணி நேரத்திற்குள் அரசு தரப்பு சாட்சிகளாக வளையாபதி மற்றும் சாந்தி ஆகியோர்களை சாட்சியமாக இருக்கக்கோரி கடிதம் மூலம் வரவழைத்தேன். என்னுடைய அலுவலகத்திற்கும் சம்பந்தப்பட்ட சாட்சிகளின் அலுவலகங்கள் வேலூரிலேயே இருந்தாலும் எவ்வகையில் கடிதம் அனுப்பினேன் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சாட்சிகள் வளையாபதி மற்றும் சாந்தி இருவரும் தங்களின் சாட்சியங்களில் புகார் பெற்ற முதல் நாளுக்கு முன்பே எங்கள் மேல் அதிகாரிகள் மூலம் 12.08.2013 அன்று மாலை தகவல் தெரிவிக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. பொறிவைப்பு நடவடிக்கைக்கு லஞ்சமாக கேட்ட பணத்தை புகார்தாரர் கொண்டு வந்தாரா அல்லது அலுவலகத்தில் இருந்த பணத்தை

கொடுத்தோமா என்றால் புகார்தாரர் எடுத்து வந்தார். புகார்தாரர் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்பதால்தான் இந்த வழக்கை போட்டுள்ளார் என்றும் அதனால் அவ்வளவு பணம் எடுத்து வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 500 ரூபாய் நோட்டுக்கள் 2, 100 ரூபாய் நோட்டுக்கள 5, மொத்தம் 7 ரூபாய் நோட்டுக்கள் கொண்டு வந்தார் என்று வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த பணங்களை கொடுத்தற்கு சான்றாக ஏதாவது சான்றொப்பம் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களிடம் பெற்றேனா என்றால் ஒப்படைப்பு மகசரில் குறிப்பிட்டுள்ளனே். ஆனால் அலுவலகத்தில் உள்ள Vigilance போலீசாரிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை. அந்த ஒப்படைப்பு மகசரில் நான் வரவழைத்த இரண்டு சாட்சிகள் மற்றும் நான் மட்டும் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் புகார்தாரரும் கையொப்பம் போட்டுள்ளார். ஒப்படைப்பு மகசர் எங்கள் காவல் நிலையத்தில்தான் தயார் செய்யப்பட்டது என்பதற்கு ஆதரவாக எங்கள் ஆலுவலகத்தில் பணிபுரியும் யாரிடமும் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

ஆஜர் எதிரிகள் இருவரும் குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கிராம முக்கிய சேவகி மற்றும் கிராம சேவகியாக பணிபுரிந்து வந்தார்கள் என்றால் சரிதான். வேலூரிலிருந்து குடியாத்தம் செல்ல சுமார் ஒன்றரை மணி நேரம் ஆகும் என்றால் 40-45 நிமிடத்திற்குள் சென்றுவிடலாம். சம்பந்தப்பட்ட குடியாத்தம், வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் நாங்கள் வந்துள்ள விவரத்தை தெரிவித்தோமா என்றால் தெரிவித்தோம்.

அவ்வாறு நாங்கள் தெரிவிக்கவில்லை என்றும் ஆவணப்படுத்துவதற்காக இவ்வாறு தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொறிவைப்பு நடவடிக்கை செய்ததற்காக குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றிய அலுவலகர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, வட்டார வளர்ச்சி அலுவலரை சாட்சியாக சேர்த்துள்ளோம். சம்பவம் நடைபெற்ற பிறகு மேல் நடவடிக்கைகளுக்காகத்தான் வட்டார வளர்ச்சி அலுவலரை சாட்சியாக கூப்பிட்டோம் என்றும் அதற்கு முன்பு அழைக்கவில்லை என்றால் சரிதான்.

கொடி நாள் பணம் வசூலிக்கும் நடவடிக்கை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் டீகாராமன் அவர்களை அது குறித்து விசாரணை செய்தேனா என்றால் நான் விசாரணை செய்யவில்லை. பொறிவைப்பு நடவடிக்கை செய்யும்போது நேரம் 13.08.2013 அன்று மாலை 04.00 மணி இருக்கும் என்றால் தவறு மதியம் 02.15 மணி. அந்த 02.15 மணிக்கு 1ம் எதிரி அலுவலகத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி அந்த நேரத்தில் விழுந்தோன்பாளையம் என்ற கிராமத்தில் முகாமில் கலந்துக்கொள்ள சென்றிருந்தார் என்றால் சரியல்ல.

நாங்கள் கைப்பற்றிய முகாம் பட்டியலில் விழுந்தோன்பாளையம் கிராமத்தில் நடைபெறும் முகாமில் கலந்துக்கொள்வதற்காக அவர் சென்றிருந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்ததா என்றால் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் அவர் அங்கு செல்லவில்லை. நான் சொல்வது தவறு என்றும் ஆனால் 1ம் எதிரி முகாமில்தான் அந்த நேரத்தில் அன்றைய தினம் இருந்தார் என்றும் வழக்கிற்காக அவர்

அலுவலகத்தில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கரைசல் நடவடிக்கைகளில் அ.சா.1 ஐ உட்படுத்தினேனா என்றால் உட்படுத்தவில்லை. அந்த நேரத்தில் அ.சா.1 சம்பவ இடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் வெளியே இருந்தார் என்றும் அவர் அங்கு இல்லை என்றால் அவர் சம்பவ இடத்தில் நடந்த கரைசல் நடவடிக்கையின்போது உடன் இல்லை அவர் அலுவலகத்திற்கு வெளியே இருந்தார்.

பினாப்தலின் பரிசோதனையில் 1ம் எதிரியை உட்படுத்தினேனா என்றால் 1ம் எதிரியை உட்படுத்தவில்லை இரண்டாம் எதிரியைதான் உட்படுத்தினேன் அவர்தான் பணம் வாங்கினார். இந்த மாதிரியான சம்பவமே நடைபெறவில்லை என்றும் கொடி நாள் நிகழ்வுக்காக நடந்த நிகழ்ச்சியை திரித்து இப்படி ஒரு பொய் வழக்கு போட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. திருமண உதவி தொகைகளை பெறுபவர்கள் சுமார் 10, 15 பேரை ஒன்றாக சேர்த்து ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து மாவட்ட ஆட்சியர் அந்த உதவி தொகையை கொடுப்பதை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

புகார்தாரரின் மனைவி அச்சுமா பானு நீதிமன்ற விசாரணையில் இந்த விஷயங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அவர் கையூட்டு எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

எங்கள் அலுவலக புள்ளி விவர கணக்கிற்காக ஒரு போலியான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் மேகநாதன் கலப்பு திருமண உதவி தொகை கேட்டு விண்ணப்பம் கொடுத்தது 12.09.2012 என்றால் 2012 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளார். எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த தேதி 13.08.2013 தேதி வரை 2ம் எதிரியை பார்த்ததாகவோ, அவர் பணம் கேட்டதாகவே புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் 2ம் எதிரி மீது கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மேகநாதன் கொடுத்த மனு மீது கலப்பணி செய்தது 2ம் எதிரிக்கு முன்பு பணிபுரிந்த அமுதா என்பவர் என்றால் எனக்கு தெரியாது. அமுதா என்பவரை சாட்சியமாக விசாரித்துள்ளோம் என்றும் அவரும் அப்படித்தான் சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் எதிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு பணிக்கு வந்தது 04.07.2013 அன்று என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

1ம் எதிரிதான் புகார்தாரர் மேகநாதனிடம் 2ம் எதிரியிடம் பணம் கொடுங்கள் என்று சொன்னார் என்று என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் கைப்பற்றுதல் மகசரில் சொல்லப்பட்டுள்ளது. மேகநாதனிடம் 1ம் எதிரி நீங்கள் கொண்டுவந்த கொடி நாள் பணத்தை 2 ம் எதிரியிடம் கொடுங்கள் என்று சொன்னார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.



கொடி நாள் பணம் வசூலை பொறுத்தவரையில் இன்னார்

இவ்வளவு வசூல் செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கை வட்டார வளர்ச்சி அலுவலர் அனுப்பினார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த போன்ற சுற்றறிக்கையை என்னிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் கொடுத்தார் என்றும் அது வழக்கிற்கு பாதமாக உள்ளது என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பொறிவைப்பு நடவடிக்கைக்காக பயன்படுத்திய வளையாபதி மற்றும் சாந்தி ஆகியோர் எங்களின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. 2ம் எதி மீது இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளையும் ஆவணங்களையும் சரியாக பரிசீலனை செய்யாமல் 2ம் எதிரியை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடம் பொறிவைப்பு நடந்த சம்பவ இடம் குறித்து தயார் செய்த வரைபடம். **அந்த வரைபடம் அ.த.சா.ஆ.15 ஆகும்.**

(ஏற்கனவே சாட்சியங்கள் குறுக்கு விசாரணை செயப்பட்ட நிலையில் மேற்கண்ட ஆவணம் குறியீடு செய்ய ஆட்சேபனை எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அந்த ஆட்சேபனை குறித்து இறுதி விசாரணையின்போது தீர்மானிக்கப்படும்.)



**1ம் மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.15 ஆவணம் தயார் செய்தபோது அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலகர்கள் யாரிடமும் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தை எங்கள் காவல் நிலையத்திலேயே வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Sd/-M.Elavarasan
Principal Sessions Judge
Vellore